30th June 1962]

சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலே.

* 65 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நிறுவப்பட இருக்கிற சேலம் இரும்பு உருக்குத் தொழிற் சாலேக்கு வேண்டிய இரும்புதாதுக்கள் எத்தனே சதுரமைல் பரப்பில் எந்தெந்த இடங்களில் இருந்து வெட்டி எடுப்பதாக திட்டமிடப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : Geological investigations have disclosed that, for a steel plant based on Salem iron ore, the iron ore deposits in the Kanjamalai hills, five miles west of Salem, would be the most suitable for initial exploitation.

திரு. து. ப. அழகமுத்து: திருச்சி மாவட்டத்தில் லாட புரத்திற்குப் பக்கத்திலிருந்து பச்சைமலேவரையிலும், தாத்தை யங்கார்பேட்டையிலிருந்து கொல்லிமலேவரையிலும் இரும்புக் கனி வளம் இருப்பதாகத் தெரியவருகிறது. இந்தப் பிரதேசங்களும் சேலம் திட்டத்தோடு இணைத்துக்கொள்ளப்படுமா ? 11-30 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், அந்த ஜில்லா சம்பந்தப்பட்ட ஜியலாஜிகல் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்து பதில் சொல்ல முடியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: காஞ்சமலேயில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனி, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்குப் பரீட்சித் துப் பார்க்கப்படுவதற்காக அனுப்பப்பட்டதனுடைய முடிவு அரசாங்கத்தின் கைக்கு வந்துவிட்டதா ? அப்படியானுல், அது பற்றிய விவரங்கள் அறிவிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : முதலில் லாபரடரி டெஸ்ட் செய்தார்கள். அது வெற்றிகரமாக இருக்கிறது. இரும்பு தயா ரிக்க முடியும் என்று நமக்கு அறிக்கை வந்தது. அதற்குப் பிறகு, 'பைலட் ப்ராஜெக்ட் டெஸ்ட்' செய்யவேண்டுமென்று சொல்லி, 2,000 டன் லிக்னேட்டும், 100 கிலோகிராம் இரும்புத் தாதுப் பொருளும் அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டார்கள். அவை அனுப்பப்பட்டன. இப்பொழுது ஜெர்மனியில் 'பைலட் ப்ராஜெக்ட் டெஸ்ட்' நடந்துகொண்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர்: நீலகிரியிலும் இரும்புக் கனி தாதுப் பொருள்கள் அதிகமாக இருப்பது பற்றி முன்பே பரிசிலிக்கப்பட்டு, அது நல்ல இரும்பாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிருர்கள். அதையும் சேலத் துக்குக் கொண்டுவர சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : நீலகிரி ஜில்லாவில் இருக்கக் கூடிய இரும்பு அளவு (க்வாண்டிடி) குறைவாக இருக்கிறது என்று அறிக்கை கூறுகின்றது.

திரு. இராம. அரங்கண்ணல் : அரசாங்கக் க்யூட்டராகப் பணி புரிந்த டாக்டர் பாலிகா அவர்கள் எழுதியுள்ள நூலில், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், நீலகிரி மாவட்டம், திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகள், ஆகிய இடங்களில் இரும்புக்கனி கிடைப்பதற்கு வசதிகள் உள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இடங்களிலே கிடைக்கின்ற கனிகளைக் கொண்டும் சேலம் ஆலை இயங்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : 'இரும்புக் கனி கிடைக்கும்' என்று ஜியாலஜிஸ்ட் எழுதிவிட்டால் மாத்திரம் ஆலை துவங்க முடியாது. எவ்வளவு கிடைக்கின்றது என்று பார்க்கவேண்டும். இரண்டாவது, அந்தக் கனியினுடைய இரும்புச் சத்து ('Fe' content) எவ்வளவு என்று பார்க்கவேண்டும். நம்முடைய இராஜ்யத்தில் மட்டுமல்ல; பல பகுதிகளிலும் குறைவான சத்துள்ள இரும்புக் கனி பரவலாகக் கிடைக்கிறது. அதை எடுத்து கட்டுபடியாகக் கூடிய முறையில் உபயோகப்படுத்த முடியாது. அதனால்தான், இந்த சேலம் இரும்பைக் குறித்து இப்பொழுது நாம் தனியாக முயற்சி செய்து வருகிறோம்.

திரு. மு. கருணாநிதி : இரும்புத் தொழிற்சாலை சேலத்தில் அமைக்கப்பட இருக்கிறதா ? அல்லது நெய்வேலியிலா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : டில்லி துணை அமைச்சர் திரு. பட்டாபிராமன் அவர்கள், 'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமையாவிட்டாலும், தேனிரும்புத் தொழிற்சாலையாவது அமையும்' என்று பேசியதாக பத்திரிகையிலே ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் அடிக்கடி, திரும்பத் திரும்ப, 'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை நிறுவப் போகிறோம்' என்று சொல்லி வருவதால், வழக்கம்போல் இதுவும் இல்லாமல் போய் விடுமா ? அல்லது, நிச்சயமாக இப்படிப்பட்ட இரும்பு உருக்குச் சாலை அமைக்கப்படும் என்று உறுதி கூற முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : அவரவர்கள் மனம் போல் மாங்கல்யம் வரும் என்று நினைக்கிறேன். (சிரிப்பு).

SRI K. S. G. HAJA SHERIFF : What is the percentage of iron-content in the Salem iron ore?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the 'Fe' content varies from place to place. The average would be between 36 and 42 per cent. But the ore cannot be used as such. It will have to be beneficiated to 62 per cent.

கைத்தறித் துணிகளுக்கு 'ரிபேட்'.

***66 கேள்வி.—திரு. சா. கணேசன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் வளம் பெறுவதற்காகக் கொடுக்கப்பெறும் 'ரிபேட்' ஒழுங்காக உரியவர்கட்குப் போய்ச் சேரவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா ?